# இமாமனா மஹதிய மாவூத் (அலை)
# அவர்களின் வழிகாட்டுதலின் படி
# ஜமாத் தொழுகை

தனிச் சுற்றுக்கு மட்டும்

வெளியிடுபவர்:-

மர்ஹூம் ஹஸ்ரத் H. **சையத் முஸ்தபா** (என்ற)
**ஹாஜிமியா**

ஹஸ்ரத்தின் குடும்பத்தார்

**பணகுடி**

நெல்லை மாவட்டம்

மஹதவிகளில் இரண்டு வகையினர் உண்டு. சிலர் உலக ஆசைகளை துறந்து அல்லாவின் இபாதத்தில் எந்நேரமும் ஈடுபட்டு அவனின் தொண்டிற்கு தன்னை அர்பணித்து கொண்டவர்கள் இவர்கள் 'பக்கிர்' என்று அழைக்கப்படுகின்றனர். இத்தகுதிக்கு ஆண், பெண் என்ற பாகுபாடுகிடையாது. இவர்கள் இறைவன் பணிக்காக மாத வருட சம்பளம் பெறுவதில்லை. யாரிடமும் தன்னுடைய சுயதேவைக்காக உதவி கோரமாட்டார்கள். அல்லாவின் பெயரால் பிறர் தரும்உதவிகளை மட்டுமே ஏற்று வாழ்ந்து வருபவர்கள். இமாமனா மஹதிய மாஹூத் (ஜீவன்பூரி) (அலை) அவர்களது காலத்து பக்கீர்கள் எவ்வித உதவியும் யாரிடமிருந்தும் பெறாமல் மாதக்கணக்காக பசியை பொருத்து அல்லாவின் இபாதத்தில் வாழ்ந்து வந்தார்கள். பக்கீர்கள், ஏழை, பணக்காரன் பலசாலி, நோயாளி என்ற பாகுபாடு பாவிக்காமல் அல்லாவைத் தவிர எவருக்கும் அஞ்சாமல்அல்லாவை அடிடணிந்து வாழ்ந்தார்கள்.

பேரரசர் அக்பரது தர்பாரிலிருந்தமுல்லாக்கள் கூடி இமாமனா மஹதிய மாஹூத் (அலை) அவர்கள் வந்ததைப்பற்றி இமாம் ஷேக் முஸ்தபா குஜராதி பிரச்சாரம் செய்து வருவதால் அக்கருத்துக்களை பெரும் திரளான மக்கள் ஏற்று மஹதவிகளாக மாறுவதைப் பற்றி கூறி அவரது தவறான பிரச்சாரத்தை நிறுத்த அவரை விசாரிக்க கைது செய்ய வேண்டும் என வேண்டுகோள்வைத்தனர் அவ்வாரே இமாம் ஷேக் முஸ்தபா குஷராதி கைது செய்யப்பட்டார். பின்பு அக்பரது தர்பாரில் விசாரணை நடத்தப்பட்டது. இமாம் ஷேக் முஸ்தபா குஜராதி பேரரசர் உட்பட எவருக்கும் தலை வணங்காமல் திருக்குரானை ஆதாரமாகக் கொண்டு தனது வாதத்தை உண்மை என நிருபித்துகாட்டியதை மஹதவி பக்கீர்களின் பண்பிற்கு எடுத்துக் காட்டாக கொள்ளலாம்.

(ஆதாரம் மஜ்லிஸ்-ஏ-கம்ஸா ஹிஜிரி 984 ஆங்கில ஆண்டு
கி.பி. 1587)

மஹுதவிகளில் மற்றொரு சாரார் உலக வாழ்க்கையில் ஈடுபட்டு தொழில், விவசாயம் வியாபாரம் அரசு பணிகளில் ஈடுபட்டு வாழ்பவர்கள். அத்துடன் ஷரீயத்தை பேணி பாதுகாப்பவர்கள் ''காஸிப்'' என்று அழைக்கப்படுகின்றனர்.

பக்கீர்கள் ஜமாத் தொழுகையில் ஈடுபடுவதுபோல காஸிப்களும் கட்டாயமாக ஜமாத்தொழுகையில் பங்கேற்கவேண்டும் என இமாமனா மஹுதிய மாவூத் (அலை) வற்புறுத்தியுள்ளார்கள். இதன் அடிப்படையில் ஜமாத் தொழுகை ஒரு 'பரஸு'கும் என 'அகீதா ஷரிபா' என்ற நூலில் பந்தகிமியா சையத் குந்த்மீர் (ரஸி) அவர்களும் 'ரிஸாலா லைலதுல் கதர்' என்ற நூலில் ஹஸ்ரத் காஸிம் முஷ்தஹுகுரு அவர்களும் இதை தெளிவுபட எடுத்து கூறியுள்ளனர். ஜமாத் தொழுகை தனித் தொழுகையை விட 27 மடங்கு உன்னதமானது. எனவே ஒவ்வொரு மஹுதவியும் ஜமாத் தொழுகையில் ஈடுபடுவது அவசியமாகும்.

ஆனால் ஜமாத்தில் தொழவேண்டும் என்பதற்க்காக இமாமனா மஹுதிய மாவூத் (அலை) அவர்களை ஏற்க்காத மஹுதவி அல்லாத பிறரது இமாமத்தில் தொழுவது சரியா? தவறா? என்ற சர்ச்சை எழும்பியுள்ளது.

மேற்கூறிய தகுதிகள் அல்லாத இமாமனா மஹுதிய மாவூத் (அலை) அவர்களை ஏற்க்காத அல்லாவின் பொருட்டு தொழுகையை நடத்த சம்பளம் பெறுபவரது இமாமத்தை ஏற்பது சரியல்ல மேலும் இதற்கான தெளிவான விடையை திருக்குரானிலும், ரசூலே கரீம் நபிகள் நாயக் (ஸல்) அவர்கள் ஹதீஸுகளிலும் இமாமனா மஹுதிய மாவூத் (அலை) அவர்களது அறிவுரைகளிலிருந்தும் பெறலாம்.

தன்னை எவ்வாறு துதிக்கவேண்டுமென அல்லா ஹுத்தாலா திருக்குரானில் சூரா 7 அல் அர்ப் ஆயத் 205 ல் (வசனம்) கூறியுள்ள தன் மொழிப்பெயர்ப்பு இங்கு தரப்பட்டுள்ளது. ''உம் மனதில் மிக பணிவுடனும், பக்தியுடனும் உரத்த குரலில் அல்லாமல் (மெதுவாக) காலையிலும் மாலையிலும் இறைவனது திருப்பெயரை துதிப்பீராக அவனை மறந்து விட்டவர்களில் நீரும் ஒருவராக ஒரு வினாடி கூட இருக்காதீர்''.

'காலையிலும் மாலையிலும்' என்பதையும் 'இறைவனது திருப்பெயரை' என்பதையும் 'ஒரு வினாடி கூட இருக்காதீர்' என்பதையும் பரிசீலித்தால் ஐந்து வேளை தொழுகைக்கும் அப்பாற் பட்டு தன்னை தியானிக்க அல்லா கட்டளையிட்டுள்ளான் என்பது தெளிவாகும். எனவே அவனை மறந்துவிட்டவர்களில் ஒரு வினாடி கூட இருக்காதவர்களது இமாமத்தை மட்டுமே ஏற்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளோர் ஒவ்வொரு வினாடியும் இறைவனது திருப்பெயரை தியானிப்பது எவ்வாறு சாத்தியமாகும்? என்பது புரியாத புதிராக இருந்தது. இதற்கான சாத்தியக்கூறு 'ஸிகரே கபி' மூலம் தான் நிறைவேற்ற முடியும். இதனை ரசூலே கரீம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் உலகத்தில் அல்லாவின் நாட்டப்படி அவர்களது ஒரு சில ஸஹாபாக்களுக்கு மட்டுமே அருளப் பட்டது. அதன்பின் தோன்றிய வலிமார்களால் ஸிகரே கபியைப் பற்றிய விவரம் அறிந்து செயல்பட வெகுவாக முயன்றும் அறிய முடிய வில்லை.

அந்த பரம ரகசியத்தை ரசூலே கரீம் முஹம்மத் (ஸல்) அவர் அவர்களால் அமானத்தாக கிஜர் (அலை) மூலம் இமாமனா மஹதிய மாவூத் (அலை) அவர்களுக்கு அருளப்பட்டது. ஹிஜிரி 847-ல் தற்போது உத்திரபிரதேசத்திலுள்ள ஜீவன்பூர் என்ற நகரில் ஆலே ரசூலிலிருந்து தோன்றிய அப்துல்லா ஆமினா தம்பதியருக்கு மகனாக இமாமனா மஹதிய மாவூத் (அலை) பிறந்து வளர்ந்து வந்தார்கள் அதே நகரில் மார்க்க பயிற்சி பள்ளியை நடத்தி வந்த ஹஸ்ரத் ஷேக் தானியல் (ரஹ்) அவர்களிடம் இமாமனா மஹதிய மாவூத் கல்வி பயின்றார்கள். ஒரு நாள் அந்த ஞானகுரு, ஷேக் தானியால் (ரஹ்) அவர்களை ஹஸ்ரத் கிஸர் (அலை) அழைத்து இமாமனா மஹதிய மாவூத் (அலை) அவர்களை தாம் சந்திக்க விரும்புவதாக கூறி அவர்களை அந்த ஊரிலுள்ள 'கோக்ரி பள்ளி வாசலுக்கு' அழைத்து வரும்படி கோரினார். அவ்வாறே அவர்கள் சென்று ஷேக் தானியால் (ரஹ்) பள்ளியின் வாசலில் அமர்ந்து கொண்டு இமாமனா மஹதிய மாவூத் (அலை) அவர்களையும் கிஸர் (அலை) அவர்களையும் சந்திக்க ஏற்பாடு செய்தார்கள்.

அப்போது கிஸர் (அலை) இமாமனா மஹதிய மாவூத் (அலை) அவர்களிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் தரப்பட்ட மார்க்க ஞானப் பொருளை (அமானத்) ஒப்படைத்தார்கள். அதன் மூலம் 847 ஆண்டுகளாக ஒரு வினாடி கூட மறவாது இறைவனை துதிக்கும் முறைக்கான முறையானபதில் அந்த அமானத்தில் அருளப்பட்டிருந்தது அமானத்தின் மூலம் பெற்ற 'ஸிகரே கபி'யின் பயிற்சியை முதலில் ஹஸ்ரத் கிஸர் (அலை) க்கும் பின்பு ஹஸ்ரத் ஷேக் தானியால் (ரஹ) அலைக்கும் இமாமனா மஹதிய மாவூத் (அலை) கற்பித்தார்கள். அதற்கு பின்பு இமாமனா மஹதிய மாவூத் (அலை) அவர்கள் 'ஸிகரே கபி'யின் முறையை தன்னிடம் மார்க்க வழி காட்டுதல் நாடி வந்த அல்லாவின் நல்லடியார்களுக்கு கற்றுத் தந்தார்கள். அதன் மூலமாக வினாடி இடைவெளி இன்றி எந்நேரமும் உறக்கத்திலும் கூட அல்லா வின் தியானத்தில் மனிதன் ஈடுபட முடியும் என்பதை உணர்த்தி மஹதவிக்கள் இந்த முறையை கடைபிடித்து வருகின்றனர்.

காலையிலும், மாலையிலும் அல்லாவின் பெயரைக் கொண்டு தியானம் செய்வதன் மூலம் அவனது பேருதவி கிடைக்கும் என இமாமனா மஹதிய மாவூத் அலை திருக்குரானின் 33-வது சூரா அஹ்ஜாப் வசனம் 41 முதல் 43 முடிய உள்ள வாசகங்களை வலி யுறுத்தி அடிக்கடி கூறுவார்கள் அவ்வாசகமாவது.

''விசுவாசிகளே அல்லாவை அதிகமாக துதி செய்யுங்கள்'' (41)

''காலையிலும் மாலையிலும் அடிக்கடி அவனை துதி செய்து வாருங்கள்'' (42)

''அவன் தான் உங்களைப் பாவ இருட்டிலிருந்து இரட்சித்து வெளிச் சத்திற்கு கொண்டு வந்திருக்கின்றான். அவனது மலக்குகளும் உங்களுக்காக பிரார்த்தனை செய்கின்றனர். அல்லா விசுவாசி களாகிய உங்கள் மீது கிருபை செய்பவனாகி உள்ளான்''

எனவே இமாமனா மஹதிய மாவூத் (அலை) 24 மணி நேரமும் ஸிகருல்லா எனும் அல்லாவை தியானிப்பதை கடமை (பரஸ்) என கூறியுள்ளார்கள். குறிப்பாக பக்கீர்கள் தொழுத பின்பு தொழுகை பாயில் அமர்ந்து கீழ்கண்ட நேரங்களில் ஸிகரில் ஈடுபட வற்புறுத்தி யுள்ளார்கள். பஜர் (காலை) தொழுகைக்கு பிறகு 3 மணி 45 நிமிடங் கள் இஷா (இரவு) தொழுகைக்கு பிறகு 5 மணி 15 நிமிடங்கள் இரவில் நவுபத் ஜக்னா எனும் குழு தியானத்தில் 3 மணி நேரமும் அமர்ந்து ஸிகர் செய்ய வேண்டும்.

நவுபத் ஜக்னா என்பது ஸிக்ரை கடைப்பிடிப்போர்கள் தங்களுக்குள் இரண்டு குழுக்களாக பிரித்துக் கொள்வார்கள். முதல் குழு 3 மணி நேரம் ஸிகர் செய்யும் போது அடுத்த குழு உறங்கி ஓய்வு எடுக்கும் 3 மணி நேரத்திற்குப்பின் தஸ்பி கூறி அடுத்த குழுவை எழுப்பிவிட்டு முதல் குழுவினர் உறங்கச் செல்வார்கள். இரண்டாவது குழு 3 மணி நேரம் தியானத்திற்குப் பிறகு ஓய்வு எடுக்கும் முதல் குழுவினரை எழுப்பி இரண்டு குழுவினரும் சேர்ந்து பஜர் தொழுகை வரை ஸிகரில் இருப்பார்கள்.

திருக்குரான் சூரா 55 அர்ரஹ்மானில் ஆயத் 9-ல் ''நீங்கள் நிறையில் (எடையில்) வரம்பு மீறாமலிருக்கும் பொருட்டு நீங்கள் நியாயமாக நிறுத்துங்கள், எடையை குறைத்து விடாதீர்கள்'' என கூறப்பட்டுள்ளது அதன்படி 24 மணி நேரத்தில் 12 மணி நேரம் தனது சொந்த வேலைக்கும் மீதி 12 மணி நேரம் அல்லாவிற்காகவும் சமமாக பிரித்து ஸிகர் நேரமாகிய 3-45மணி + 5-15மணி + 3மணி = 12மணி) வாழ்வதைப் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதைப்பற்றிய உறுதியான அறிவிப்பு சூரா 18 அல்கஹ்ஃபு ஆயத் 28 ல் கூறியிருப்பதன் தமிழ் ஆக்கம் ''நபியே எவர்கள் தங்கள் இறைவனை நாடி அவனையே காலையிலும் மாலையிலும் பிரார்த்தனை செய்து கொண்டு இருக்கின்றார்களோ அவர்களுடன் நீரும் (உமது கஷ்டங்களை) பொருத்திருப்பீராக. இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரத்தை நீர் விரும்பி அத்தகு நல்லவர்களை விட்டு கண்பார்வையை திருப்பி விடாதீர். அன்றி எவன் தனது சரீர இச்சையை பின்பற்றிய காரணத்தால் அவனது இருதயத்தை நம்மை (அல்லாவை) தியானிப்பதிலிருந்து திருப்பி விட்டோமோ அவனுக்கு நீர் வழிபடியாதீர் அவனது காரியம் எல்லை கடந்ததாகும்''

மூமின்கள் பொறுமையை பின்பற்றி இத்தகைய சிறப்பானவர்களுடன் வாழும்படி மேற்கூறிய வசனம் தெளிவுபடுத்துகின்றது. அந்த சிறப்பானவர்கள் அல்லாவிற்காக உலகை துறந்தவர்கள் (தரக்கே துன்யா) அவர்கள் காலை மாலை நேரங்களில் அல்லாவின் தியானத்தில் இருப்பார்கள். அல்லாவிற்காக தங்களை வருத்திக் கொள்ளும் இப்படிப்பட்ட மூமின்களாகிய இச்சிறப்பு மிக்கவர்களை விட்டு வேறு எதிலும் தனது கண்பார்வையை கூட திருப்பக் கூடாது. வேறு யாரையாவது பார்க்க நேரிட்டால் உலக ஆசையில் வாழும் அந்த நபர்களைப் பார்த்து பார்ப்போர் மனமும் கெட்டுவிடும் என திருக்குரானின் மேற்கண்ட வசனம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது

மேலும் இச்சிறப்பானவர்கள் அல்லாவிடம் தங்களை முழுமையாக ஒப்படைத்தவர்கள். அவனது விருப்பமே தனது விருப்பமாக கொண்டவர்கள். மற்றவர்கள் ஒருசில சந்தர்ப்பங்களில் அல்லாவை நினைக்காமல் இருக்கமான இதயத்துடன் தனது சொந்த விருப்பப்படி உலக ஆசைகளில் ஈடுபட்டு வாழ்ந்து எல்லை மீறிய செயல்களை செய்பவர்களாக இருக்கின்றனர். அவர்களது இமாமத்தை ஏற்பது முற்றிலும் சரியல்ல. அதைத் தவிர்க்க மஹதவிக்கள் வெளி இடங்களுக்கு செல்ல நேர்ந்தால் குறைந்த பட்சமாக இரண்டுபேர் சேர்ந்து செல்வது நல்லது எனவும், அப்போதுதான் அந்த இருவரில் ஒருவர் இமாமாகவும் மற்றவர்முக்ததியாகவும் (பின்நின்று தொழுபவராகவும்) ஜமாத் தொழுகையை நிறைவேற்றலாம் என இமாமனா மஹதிய மாவூத் (அலை) எடுத்து கூறியுள்ளார்கள்.

அதேபோல் வாக்களிக்கப்பட்ட மஹதி அவர்தான் என அறிவிப்பு அல்லாவிடமிருந்து வந்த பின்பும் அதை வெளிப்படுத்த நீண்ட காலமாக தாமதித்த இமாமனா மஹதிய மாவூத் (அலை) மேலும் வெளிப்படுத்தாமல் இருப்பது அல்லாவின் கட்டளைக்கு எதிரானது என உணர்ந்து தனது விலாயத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்களை வாக்களிக்கப்பட்ட மஹதியாக ஏற்காதவர்கள் அல்லாவின் கட்டளையை மீறுபவர்களாக கருதப்படுகிறார்கள்.

திருக்குரானை முறையாக பின்பற்றி வாழ்ந்த ஹஸ்ரத் இமாமனா மஹதிய மாவூத் (ஜீவன்பூரி) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஹதியாக ஏற்காதவர்கள் ரசூலே கரீம் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்களால் கிஸர் (அலை) மூலமாக அனுப்பப்பட்ட ரகசியமான ஸிகர் கபியின் வழிமுறைகளை பற்றிய விவரம் அறியமுடியாதவர்கள் அதனால் ஸிகரே கபியில் ஈடுபடாதவர்கள் முன்பு தெரிவித்தபடி 7-வது சூரா அல்அஃராப் 205 வது வசனத்தில் கண்டுள்ளபடி இறைவனின் தியானத்தில் வினாடி கூட தவறாமல் ஈடுபடமுடியாதவர்கள் அதன் காரணமாக அல்லாவின் கட்டளையை மீறுபவர்கள் அல்லாவின் எந்த ஒரு கட்டளையை யாரேனும் கீழ்படியர்விட்டால் அவர்களது இமாமத்தை ஏற்று தொழுவது முறையானதல்ல என்பது இமாமனா மஹதி (அலை) அவர்களின் கூற்று 'அகீதா ஷரீபா' எனும் நூலில் தெளிவாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஆகவே அத்தகு முஸ்லீம்களின் பின்னர் தொழுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

வித்தர் தொழுகையில் மூன்றாவது ரக்காத்தில் தக்பீருக்கு பிறகு சொல்லப்படும் 'துவாயகுனுத்தின்' ஒரு வாசகத்தின் அர்த்த மானது 'அல்லாவை' அடிபணியாதவர்களை நாங்கள் புறக்கணிக் கிறோம். என்பதாகும் எனவே இமாமனா மஹதிய மாவூத் (அலை) அவர்களை ஏற்காமல் 'ஸிகரே கபி'யின் மூலம் அல்லாவின் தியானத்தில் மூழ்காமல் அல்லாவின் விருப்பத்திற்கு மாறாக செயல்படுபவர்கள் போன்றவர்களை புறக்கணிப்பது தவிர்க்க முடியாத போது அவர்களது இமாமத்தை எவ்வாறு ஏற்றுக் கொள்ளமுடியும்.

இத்தனை எச்சரிக்கைகளுக்கு பிறகும் ஏதாவது ஒரு முஸ் லீம் பள்ளியில் மஹதவி அல்லாதவரது இமாமத்தை ஏற்று தொழு கைக்கு அவர்களது உதவியை நாடுவது எப்போட்டது என்பதை திருக்குரான் சூரா 3 ஆல இம்ரான் ஆயத் 149. கூறியிருப்பதாவது

''விசுவாசிகளே (அல்லாஹ்வை நிராகரிப்போரை நீங்கள் பின்பற்றினால், அவர்கள் உங்களை (உங்கள் விசுவாசத்திலிருந்து நீங்கள் விலகி)ப் பின்செல்லும்படி திருப்பிவிடுவார்கள் அதனால் நீங்கள் நஷ்டமடைந்தவர்களாக மாறிவிடுவீர்கள்''

தீதாரே குதா எனும் இறைதரிசனம் தனது நற்கருமங்களாலும் நிரந்தர இறை தியானத்தின் (ஸிகர்) வாயிலாகவும் மனிதன் இவ்வுலக வாழ்கையில் அடையவேண்டியது அவசியம்என இமாமனா மஹதிய மாவூத் (அலை) கற்பித்துள்ளார்கள். ஆனால் தீதாரே குதா சாத்தியமானதே அல்ல என்பது பிறரது வாதம்.

சூரா 18 அல்கஃப் ஆயத் 110ன் தமிழாக்கம்.

''நபியே நீர் கூறும் நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான், நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன் தான் என்று எனக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எவன் தன் இறைவனை சந்திக்க விரும்புகிறானோ அவன் நற்கருமங்களைச் செய்து தன் இறைவனுக்கு ஒருவரையும் இணை வைக்காது (அவனையே) வணங்கி வருவானாக''

சூரா 3 அல இம்ரான் ஆயத் 92 ன் தமிழாக்கம்

உங்களுக்கு பிரியமான வற்றிலிருந்து நீங்கள் செலவு (தானம்) செய்யாத வரையில் நிச்சயமாக நீங்கள் நற்கருமம் செய்யும் நிலையை அடையமாட்டீர்கள்' (தானமாக) நீங்கள் எதை செலவு செய்த போதிலும் நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிவான்.

குறிப்பு மேலே அடிக் கோடிட்டுள்ள வாசகம் தரக்கே துன்யாவை குறிக்கிறது.

சூரா 12 யூசுப் ஆயத் 108

நபியே நீர் கூறும் ''இதுவே எனது (நேரானவழி) அல்லாவை ஒருவர் தனது புறக்கண்களால் காணமுடியும் என தெளிவான ஆதாரத்தைக் கொண்டு நானும் என்னை பின்பற்றுபவர்களும் இருக்கிறோம் என்பதால் (உங்களை) அல்லாவின் பக்கம் அழைக்கின்றேன். அல்லா மிகப்பரிசுத்தமானவன் ஆகவே அவனுக்கு இணை வைப்போரில் நானும் ஒருவனல்ல.

(அப்துல்லா யூசுப் அலி ஆங்கில வாசகங்களின் தமிழாக்கம் பக்கம் 582)

சூரா 30 அல்ரம் அயத் 6

இது அல்லாவுடைய வாக்குறுதி. அல்லாஹ் தன்னுடைய வாக்குறுதியில் மாறுவதில்லை. எனினும் மனிதரில் பெரும்பாலோர் (இதனை) அறியமாட்டார்கள.

எனவே மஹதவிகள் தங்களது தொழுகைகளை வீணாக்காமல் அவர்களது தொழுகையை யா அல்லா உம்மை பணிந்து உமது கட்டளையை ஏற்று நடக்கும் உண்மையான முஸ்லீமின் இமாமத்தில் தொழ உமது ஆசி என்றும் இருக்க அருள்புரிவீராக.

ஆமீன் யாரப்புல் ஆலமீன்

ஆதாரம்:

திருக்குரான் அப்துல்லாயூசுப்அலி (ஆங்கிலம்) விளக்கம் தமிழ் விளக்கம்

மஜ்லிஸ்-ஏ-கம்ஸா பக்கீர்சையத்ஜியாவுல்ல (ஆங்கிலம்)